**தலைப்பு 163 - உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 163 - உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 திசெம்பர் 05 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேனுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 5,139.36 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 2,862.49 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 2,276.87 மில்லியன் அதாவது 44.30 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 853.02 | 827.09 | 25.93 | 3.04 |
| மூலதனம் | 4,286.34 | 2,035.40 | 2,250.94 | 52.51 |
| மொத்தம் | 5,139.36 | 2,862.49 | 2,276.87. | 44.30 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 16301 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 32.00 | 31.98 | 20.00 | 24.32 | 100.00 | 86.66 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 05 வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை 46.35 மில்லியனாகும். விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா.மில்லியன் |
| 6000/0000/00/0001/0092/000 | 1.82 |
| 6000/0000/00/0016/0073/000 | 43.08 |
| 6000/0000/00/0018/0080/000 | 0.75 |
| 6000/0000/00/0002/0124/000 | 0.01 |
| 6000/0000/00/0013/0138/000 | 0.69 |
| **மொத்தம்** | **46.35** |

### 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்றதன் பிரகாரம் பிணை பதிவேடு பேணப்படாதிருந்ததுடன், நிலையான சொத்துப் பதிவேடு முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.2 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1.13 மில்லியனான 05 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப் பிரமாணம் 565(5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காக பொது 71 மாதிரிப்பத்திரத்தில் தயாரிக்கப்பட்ட மாதாந்த பொழிப்புக்கள் அடுத்த மாதம் முடிவடைவதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அமைச்சின் 05 வைப்புக்களுக்குரிய மாதாந்த வைப்பு பொழிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

16301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடன்மீதிகளில் ரூபா 997,100 தொகையில் 01 வருடம் முதல் 05 ஆண்டுகள் வரையிலும் ரூபா 391,095 தொகை 05 ஆண்டுகளுக்கு

மேற்பட்ட காலமாகவும் காணப்பட்டதுடன் நிலுவை கடன்மீதிகளை அறவிடுவதன் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றில் தனியாள் மீதி வகைப்படுத்தல் பொழிப்பில் சீராக்கப்ப்டுள்ள ரூபா 1,426,149 ஐ இனங்காணாத மீதிகளின் பெறுமதி 2004 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வருதுடன் அம்மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

அமைச்சினால் முறைப்படி சொத்துக்கள் கையேற்கப்படாமல் அச்சொத்துக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாணங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைச்சிற்கு சொந்தமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 185 கலாசார நிலையங்கள் காணப்பட்டதுடன் அதில் 152 நிலையங்கள் அமைச்சிற்குச் உரித்து இல்லாத காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இக்காணிகளின் சட்டரீதியான உரித்து அமைச்சிற்கு கையேற்காமை காரணமாக அந் நிலையங்களின் நிலைத்திருதன்மை தொடர்பாக சிக்கல்கள் தோன்றியிருந்தன.

### (இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 1,625.77 மில்லியனாக இருந்ததுடன் அதற்குரிய பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒதுக்கீட்டுக் கணக்கில் டீஜீஎஸ்ஏ8(i) படிவத்தில் ரூபா 513.41 மில்லியன் தேறிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் சபைக்கு செலுத்த வேண்டிய பொறுப்பொன்றாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான பொறுப்பொன்று உள்ளவாறாக காணப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

(ii) வடமேல் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பொறுப்பு ரூபா 139.54 மில்லியனாக இருந்த போதிலும் அது ஒதுக்கீட்டுக் கணக்கின் டீஜீஎஸ்ஏ8(i) கூற்றில் ரூபா 189.58 மில்லியனாக ரூபா 50 மில்லியன் கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது.

(iii) மாத்தறை நாவினமன சார்க் கலாச்சார நிலைய நிர்மாணத்தின் மொத்த பொறுப்புக்கள் ரூபா 10.11 மில்லியனாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டின் சனவரி மற்றும் பெப்ரவரி பட்டியலின் பிரகாரம் கொடுப்பனவு ரூபா 10.44 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 0.33 மில்லியன் பொறுப்பு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா.மில்லியன் | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 835(3) | 9.6 | கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக் கொள்ளும் உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு முன்னர் அதனை சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரி எழுத்துமூல உடன்படிக்கைக்கு விஷேடமாக உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், வடமேல் செயலக கட்டிடத்தை வாடகைக்கு எடுக்கும் போது அந்நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 1647(ஆ) | - | அமைச்சின் சகல வாகனங்களுக்கும் உரிய கணிப்பீட்டு அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசின் கொள்வனவுக் வழிகாட்டிக் கோவை 1.5 வழிகாட்டல் | 304.4 | ரூபா 5 மில்லியனை விஞ்சிய பொது ஒப்பந்தங்களுக்காக பெறுகை செயற்பாட்டில் ஈடுபடக்கூடிய சகல உத்தியோகத்தர்களின் விஷேட கவனம் 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்பக்கை சட்டத்தின் 8(1), 8(2), 9(1), 9(2) மற்றும் 12 ஆம் பிரிவுகளுக்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். எனினும் வடமேல் செயலகத்தினால் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கண்காணிப்பின் கீழ் மேம்படுத்தப்பட்ட 24 வீதிகளுக்கு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.6 செயலாற்றல்

2016 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

அமைச்சினால் பிரதான செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சகல பிரதேச செயலகப் பிரிவிலும் கலாசார நிலையமொன்றை தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சில் நிர்மாணப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் நிலைய நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் அப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் 1998 ஆம் ஆண்டு முதல் 2016 சனவரி 05 ஆந் திகதி வரையில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருந்த கலாசார நிலையங்களின் எண்ணிக்கை 185 ஆக இருந்தன. 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 123 பிரதேச செயலக பிரிவுகளில் கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சினால் ரூபா 138,310,740 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த 13 கலாசார நிலையங்கள் 03 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 2017 சனவரி 05 ஆந் திகதி வரையிலும் திறந்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.7.1 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவை வழிகாட்டலிருந்து விலகுதல்

வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 329 வீதிகளில் 24 வீதிகளை மேம்படுத்துவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட போட்டி கூறுவிலை கோருதலின் கீழ் கூறுவிலை கோரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வல்பொல நாதகனே வீதியை அபிவிருத்தி செய்தல்

(i) கொடுப்பனவு பட்டியலின் வேலை விடய இலக்கம் 17 இன் கீழ் பக்கோ லோடர் 12 நாட்கள் வேலைத்தளத்தில் ஈடுபடுத்தப்பட்டதாக வாரியபொல நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளரால் உறுதிப்படுத்தப்பட்டு ஒரு நாளைக்கு ரூபா 24,000 வீதம் ரூபா 288,000 கொடுப்பனவு செய்வதற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. 2017 சனவரி 11 ஆந் திகதி தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவ்வேலைவிடயங்கள் நிறைவேற்றப்படாமல் இருந்ததுடன் பெக் லோடருக்குப் பதிலாக EXCAVATOR இயந்திரமொன்றை பயன்படுத்தி வீதி அமைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் 2017 யூலை 17 ஆந் திகதிய ஐடப்சீ/02/எப்-01/07/2017 ஆம் இலக்க அமைச்சு செயலாளரின் பதிலின் பிரகாரம் அக்கொடுப்பனவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் உடனடியாக அந்த இயந்திரத்தை அப்புறப்படுத்தி அதற்குப் பதிலாக பெக்கோ லோடரைப்

பயன்படுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ii) மேற்படி வீதிக்குரிய வேலைவிடய இலக்கம் 05 இன் கீழ் ABC கலவை 2200 கனமீற்றருக்கு பரப்பி பதப்படுத்துவதற்கு ரூபா 1,601,600 தொகை கொடுப்பனவு செய்வதற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவை பரப்பப்பட்ட விதம் தொடர்பாக அளவீட்டுப் பத்திரம் கொடுப்பனவு பட்டியலுடன் சமர்ப்பிக்கப்படவில்லை.

(iii) கற்களின் தரம் (Density) அளவிடுவதற்கான பரிசோதனை BD 812-2-1995 ஆம் இலக்க நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) வீதிக்கு பரப்புவதற்கு கொண்டு வரப்பட்டிருந்த ABC கலவை தரப் பரிசோதனைக்கு உட்படுத்தாமல் வாரியபொல நிறைவேற்று பொறியியலாளரின் வாய்மொழி கட்டளையின் பேரில் ஒப்பந்தக்காரர் ABC ஐ பரப்பியதாக ஒப்பந்தகாரரின் பொறியியலாளரால் கணக்காய்விற்கு வழங்கிய உறுதியுரையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் இவ்வீதிக்கு ABC வழங்கல் குவித்தல், மற்றும் பரப்புவதற்காக ஒப்பந்தகாரருக்குச் செலுத்திய தொகை ரூபா 6,160,000 ஆக இருந்ததுடன் பொருட்கள் உரிய தரத்துடனானது என்பதை உறுதிப்படுத்துவதற்கு முன்னர் கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. மேலும் வீதியில் ஒப்பந்தத்தை மேற்பார்வை செய்த வாரியபொல நிறைவேற்று பொறியியலாளர் கீழ் காணப்படும் ஆய்வுகூடத்தின் மூலமும் பரிசோதனை அறிக்கை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அவ்வறிக்கை சுயாதீன நிறுவனமொன்றின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2017 சனவரி 12 ஆந் திகதி மேற்கொண்ட வெளிக்கள கணக்காய்வுப் பரிசோதனையின் போது நிறைவேற்றப்படாத 11 வேலை விடயங்களுக்காக ரூபா 5,472,737 கொடுப்பனவு செய்வதற்கு மாகாண அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் பரிந்துரைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2016 நிதியேற்பாட்டின் மூலம் வடமேல் மாகாண அலுவலகத்தினால் வீதி நிர்மாணம் வாரியபொல பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்னர் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நேர் உழைப்பு அடிப்படையின் கீழ் வேலை நிறைவேற்றும் போது அதற்குரிய பொருள், உழைப்பு, மற்றும் இயந்திரங்களுக்குரிய கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு பொருள் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 37,670,940 தொகையான 09 நிர்மாணங்களுக்குரிய அம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ABC யின் தரம் தொடர்பாக பரீட்சிக்கப்படாதிருந்ததுடன் அவற்றை வீதிக்கு பரப்பி உறுதி (Compation) பரீட்சிக்கப்படாமலும் உள்ளூராட்சி மன்ற பொறியியலாளரின் அங்கீகாரமின்றி 09 வீதிகளுக்கு தார் ஊற்றுதல் வேலை நடைபெற்றிருந்தது.

(iii) வீதி விலை அட்டவணையுடனான பொருள் விதந்துரை (1600 SSCM) இன் பிரகாரம் வீதி நிர்மாணங்கள் மற்றும் நிர்மாணப் பொருட்களின் தரத்தை

பரீட்சித்துப் பார்த்து அதற்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் ABC கலவை மற்றும் 1½ ‘‘கருங்கற்கள் பெற்றுக்கொண்டு அதற்காக ரூபா 10,982,260 வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) வீதிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கும் போது வீதிக்கு பரப்பிய கற்களின் உயரம் 62 மில்லி மீற்றராக கருதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், கற்களின் உயரம் 37.5 மில்லி மீற்றராக இருந்தது. அது 62 மில்லிமீற்றர் என மதிப்பீடு செய்யப்பட்டமையால் கூடுதலாக 699 கனமீற்றர் கற்களுக்காக ரூபா 1,506,076 கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டு பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) அமைச்சினால் 1,000,000 அடையாள அட்டைகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 35.92 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொழில்நுட்ப விதந்துரைப்பில் உள்ளடக்கப்பட்ட அட்டையின் ஆயுட்காலம் (Security Service life) என்ற நியமத்தின் பிரகாரம் ISO/IEC 24789 தரம் இருக்க வேண்டுமென் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், வழங்குனர் கம்பனியின் தலைவரின் இணையத்தள தகவல்களின் பிரகாரம் அக்கம்பனிக்கு அவ்வாறான தரச்சான்றிதலொன்று இல்லையென அவதானிக்கப்பட்டது. தொழில்நுட்ப விதந்துரைப்பில் உள்ளடக்கப்பட்ட தரச் சான்றிதழுக்காக அந்த கேள்விதாரரால் ஆவண சான்றுகள் சமர்ப்பிக்கப்படாதிருக்கையில் அமைச்சினால் இந்தக் கேள்வி கேள்விதாரருக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) தொழில்நுட்ப விதந்துரைப்பில் உள்ளடக்கப்பட்ட அட்டையின் ஆயுட்காலம் Card Material போலி காபனேட் அல்லது அதற்கு சமமாக இருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் இதற்காக காணப்படும் முன்னைய கேள்வி கோரலின் கூட்டத்தின் போது அட்டையின் மூலப்பொருள் 100 சதவீதம் போலி காபனேட் ஆக இருக்க வேண்டுமெனவும் கேள்விதாரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வழங்குனர் கம்பனியால் அட்டையின் மூலப்பொருள் 100 சதவீதம் போலி காபனேட் உள்ளடக்கப்பட்டதாக உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(iii) தொழில்நுட்ப விதந்துரைப்பில் உள்ளடக்கப்பட்ட அட்டையின் ஆயுட்காலம் அட்டையின் உறுதி மற்றும் நிலைத்திருத்தல் போன்ற நியதிகளின் கீழ் அட்டையின் உள்ளடக்கம் தொடர்பாக ISO/IEC/10373 தரச்சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் வழங்குனர் கம்பனியால் அது தொடர்பான ஆவணச்சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பெறுகை கால அட்டவணையின் பிரகாரம் 2016 மே 07 ஆந் திகதி கேள்வி கோரி 2016 யூன் 06 ஆந் திகதி ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. கேள்வி முறியின் காலம் 2016 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரை மாத்திரம் செல்லுபடியாக இருந்த போதிலும், செல்லுபடிக் காலத்தை நீடிப்புச் செய்யாமல் 2017 மார்ச் 01 ஆந் திகதி உரிய வழங்குனர் கம்பனிக்கு கேள்வி அளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2016 யூலை 08 ஆந் திகதி முதல் கணக்காய்வு திகதியான 2017 பெப்ரவரி 08 ஆந் திகதி வரை வடமேல் மாகாண செயலக கட்டிடத்தின் கீழ் முதலாம் மாடி மற்றும் இரண்டாம் மாடிகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் அதற்காக மாதமொன்றுக்கு ரூபா 455,000 வீதம் 07 மாதங்களுக்காக ரூபா 3,185,000 வாடகை செலுத்தப்பட்டிருந்தது.

**3.9 முகாமைத்துவ பலவீனங்கள்**

மதுராவெல பிரதேச செயலகப் பிரிவில் கலாச்சார நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு 2003 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டு அதற்காக இதுவரை ரூபா 2.06 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டு அதன் நலன்களை நலனாளிகளுக்கு வழங்குவதற்கு அமைச்சு தயாரித்திருந்தது.

**3.10 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 23 | 20 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 05 | - | - |
| (iii) | இரண்டாம் நிலை | 748 | 646 | 102 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 580 | 603 | 12 | 35 |
| | மொத்தம் | 1356 | 1274 | 117 | 35 |